IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

METTUPALAYAM

DEPOSITION OF WITNESS

O.S.313/2018

CNR.No.TNCB19000

Date:18.03.2025 DW3

பெயர்	முகமது பாபு	**வயது**	40
த/பெ	முகமது உசேன்	**வட்டம்**	மேட்டுப்பாளையம்
விலாசம்	மேட்டுப்பாளையம்	**மாவட்டம்**	கோவை
		தொழில்	

The witness swearned under oaths Act 1969 on this the day of 18th March 2025

பி.வா.சா.3 மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் கூடலூரில் பிறந்து வளர்ந்தேன். நான் 7-ம் வகுப்பு படித்துள்ளேன். நான் மேட்டுப்பாளையம் வந்து 25 வருடங்கள் ஆகிறது. 25 வருடங்களாக மேட்டுப்பாளையத்தில் வசித்து வருகிறேன். ஆதார் கார்டில் உள்ள விலாசத்தில் வசித்து வருகிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரியை விசாரித்தால் நான் மேட்டுப்பாளையத்தில் 25 வருடங்களாக வசித்த விபரம் தெரியும் என்றால் சரிதான். நான் ஆட்டோ ஓட்டி வருகிறேன் என்றால் பில்டிங் கான்ட்ராக்ட் வேலையும் செய்து வருகிறேன். நான் ஆட்டோ சுமார் 5 வருடங்களாக ஓட்டி வருகிறேன். அதற்கு முன்பு நான் காய்கறி மார்க்கட்டில் கமிசன் ஏஜன்ட்டாக இருந்தேன்.

நான் மணிநகர் பள்ளிவாசல் அருகே போண்டா வடை கடை வைத்திருக்கிறேன் என்றால் சரிதான். நான் ஆட்டோ ஓட்டி வருவதால் அந்த பகுதியில் உள்ள மக்களை தெரியும் என்றால் சரிதான். மோகன்தாஸ் எப்படி தெரியும் என்றால் அவருடைய பில்டிங் வேலை செய்து கொடுத்தேன். எந்த வருடம் எந்த பில்டிங்கில் வேலை செய்தேன் என்றால் வருடம் ஞாபகம் இல்லை. மோகன்தாஸ் அவர்களுக்கு பாத்தியப்பட்ட வீட்டை கட்டி கொடுத்தேன். நான் பில்டிங் கான்ட்ராக்ட் வேலை செய்வதற்கான ஆதாரம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் பில்டிங் கான்ட்ராக்ட் வேலை செய்யாததால்தான் ஆதாரம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மோகன்தாஸ்க்கு எத்தனை குழந்தைகள் என்றால் இரண்டு குழந்தைகள். அந்த குழந்தைகளின் பெயர் தெரியாது. மோகன்தாஸ் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. அவர் மனைவி பெயர்

தெரியாது. B மெமோவை பற்றி தெரியுமா என்றால் தெரியும். நடைபாதைக்காகவும் செலுத்தியிருக்கிறேன். B மெமோவை மோகன்தாஸ் எத்தனை வருடங்களாக கட்டி வருகிறார் என்றால் இரண்டு வருடங்களாக கட்டியிருக்கிறார். எந்த வருடம் என்று ஞாபகம் இல்லை.

வழக்கில் வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் நடைபாதை வாதிகளுக்கு சேர்ந்ததென வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து வாதிகளுடைய அனுபவத்தில் இருக்கிறது என்றால் சரிதான். தாவா சொத்தின் நீள அகலம் பற்றி தெரியுமா என்றால் அனுமானத்தின் பேரில் சொல்லியிருக்கிறேன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொன்னதும் அனுமானத்தின் பேரில்தான் சொல்லியிருக்கிறேன். அளந்து பார்க்கவில்லை.

தாவா சொத்திற்கு வாதிகள் B மெமோ படி தண்டத்தீர்வு கட்டியுள்ளார்களா என்றால் சரிதான். எனக்கு வழக்கு விபரங்கள் எதுவும் தெரியாமல் 8-ம் பிரதிவாதி சோன்ராஜ் சொன்னதன்பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் கட்டிடம் கட்டி பழக்கம் ஏறபட்டிருந்தால் முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் மகாதேவபுரத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. மணி நகரில் 5 வருடங்களாக வசித்து வருகிறேன். தாவா சொத்திற்கு யார் பட்டாகொடுத்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

யார் எந்த தேதியில் எங்கு கொடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. சோன்ராஜ்க்காக சாட்சி சொல்ல வந்திருக்கிறேன் என்றும் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.